# தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
# தேனாம்பேட்டை, சென்னை – 18.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 5/2016–17/ நாள். 07.11.2016

விழுக்காடு மொத்த ஒப்பந்த முறை

---

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில் இணைப்பில் உள்ளவாறு பணியின் எதிரில், குறிப்பிட்ட நாளில் ஒப்பந்தப்புள்ளிகள் பொது மேலாளர் (தொழில் நுட்பம்), தாட்கோ தலைமையகம், சென்னை மற்றும் சம்மந்தப்பட்ட தாட்கோ கோட்ட செயற்பொறியாளர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும்.

தாட்கோ, தலைமை அலுவலகம் மூலம் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் சென்னையில் உள்ள தாட்கோ தலைமையகத்தில் குறிப்பிட்ட தேதியில் ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவினரால் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் முகவர்கள் முன்னிலையில் 30.11.2016 முற்பகல் 11.00 மணி அளவில் திறக்கப்படும்.

01. அரசாணை எண் 81/ ஆதிமபகுநலத்துறை/ நாள் 10.09.2011 ன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ மத்திய அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஆகியவைகளில் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டிடப் பணியில் அனுபவமுள்ள, முதல் அழைப்பாக இருந்தால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்தக்காரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். மற்ற அழைப்புகளுக்கு அனைத்து ஒப்பந்தக்காரர்களும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொள்ளலாம். தாட்கோவில் ஒப்பந்தப் பதிவு பெறாதவர்கள் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொள்வதற்கு முன்பு தாட்கோவில் தகுந்த வகுப்பில் 2016–17 நிலையில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்துக் கொள்ள வேண்டும்.

02. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பொது மேலாளர் (தொ.நு.) தாட்கோ தலைமையகம், சென்னை மற்றும் சம்மந்தப்பட்ட கோட்ட செயற் பொறியளர்களிடமிருந்து பணிகளின் பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள தேதிகளில் அலுவலக நேரத்தில் கிடைக்கும். குறிப்பிட்டுள்ள தேதிக்குள் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக் கொள்ள வேண்டியது ஒப்பந்தக்காரர் பொறுப்பாகும். குறிப்பிட்டுள்ள தேதிக்குப்பின் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரி வரும் விண்ணப்பம் பொது மேலாளர் (தொ.நு.) தாட்கோ, சென்னை – 18 மற்றும் சம்மந்தப்பட்ட செயற் பொறியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

03. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தபாலில் அனுப்பப்பட மாட்டாது. ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற நிர்ணயிக்கப்பட்ட விற்பனைக்கும் மற்றும் பெற்றுக் கொள்ள கடைசி நாள் ஏதாவது ஒரு காரணத்தால் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் ஒப்பந்தப்புள்ளி அதற்கு அடுத்த பணி நாளில் விற்பனை செய்து மறுநாள் மாலை 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். பூர்த்தி செய்யப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை பொது மேலாளர் (தொ.நு.) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 மற்றும் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் பதிவு அஞ்சல் மூலமாகவும் மேற்கண்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

04. பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் குறிப்பிட்ட காலத்திற்குள் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். காலதாமதத்திற்கு தாட்கோ பொறுப்பேற்காது. குறிப்பிட்ட கால வரையறைக்குள் பெறப்படாத ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கப்படாமல் முகவருக்கே திருப்பி அனுப்பப்படும்.

05. ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (ஒவ்வொரு பணிக்கும் ரூபாய்) இணைப்பில் உள்ளவாறு ரொக்கமாக, ஒப்பந்தப்புள்ளி கோரும் விண்ணப்பத்துடன் பொது மேலாளர் (தொ.நு,) தாட்கோ, தலைமையகம், சென்னை அல்லது சம்பந்தப்பட்ட செயற் பொறியாளர்கள் ஆவணங்களை சரிபார்த்து ஒப்புதல் அளித்த பின்னரே ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான கட்டணம் தலைமையகத்தில் காசாளரிடமோ அல்லது சம்பந்தப்பட்ட கோட்ட அலுவலகத்திலோ

செலுத்தப்பட வேண்டும். இக்கட்டணம் எந்த காரணத்திற்காகவும் எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது.

06. பெறப்பட்ட எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையோ அல்லது குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளியையோ எவ்வித காரணமும் கூறாமல் இரத்து செய்ய பொது மேலாளர் (தொ.நு.) அவர்களுக்கு முழு அதிகாரமுண்டு.

07. டேவணித் தொகை ரூபாய் இணைப்பில் உள்ளபடி அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்டு, குறிப்பிட்டுள்ள சம்மந்தப்பட்ட தாட்கோ செயற் பொறியாளர்கள் மாற்றத் தக்க வகையில் கேட்பு வரைவோலை அல்லது தேசிய சேமிப்புப் பத்திரமாகவோ, அல்லது டெபாசிட்டாகவோ இருத்தல் வேண்டும். டெபாசிட்டாக இருப்பின் (Revenue stamps) முத்திரை வில்லையில் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்படவேண்டும் இத்தொகை செயற் பொறியாளர், தாட்கோ அவர்கள் எடுக்கத் தக்க வகையில் செலுத்தவேண்டும். டேவணித் தொகை குறைவாக செலுத்தப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். டேவணித் தொகை ரொக்கமாக செலுத்துதல் ஏற்கப்படமாட்டாது. வங்கி கேரண்டி எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. டேவணித் தொகை இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படுவதுடன், ஒப்பந்தக்காரரின் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

08. ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளி படிவம் கோரும்போது முந்தைய செயல்முறை, செய்து முடித்திருக்கும் வேலையின் தன்மை மற்றும் மதிப்புத் தொகை, ஒப்பந்தக்காரர் பதிவு சான்றிதழ் மற்றும் நடப்பாண்டு பதிவு புதுப்பித்ததற்கான சான்று, மின்பணி செய்வதற்கான 'பி' அல்லது 'சி' உரிமம் பெற்ற நபரின் சான்றிதழ் மற்றும் விற்பனை வரி நிலுவையில்லா சான்று ஆகியவற்றை விண்ணப்பத்துடன் பொது மேலாளர் (தொ.நு.) தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை – 18 மற்றும் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் தான் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அல்லது ஒப்பந்தபுள்ளி இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் (Downloaded from internet)செய்து சமர்ப்பிக்கும்போது மேற்கண்ட ஆவணங்கள் அனைத்தும் இணைத்து அனுப்பப்பட வேண்டும். மேற்படி சான்றிதழ்களை சரி பார்த்த பிறகே ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பொது மேலாளர் (தொ.நு.) தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை – 18/ சம்மந்தப்பட்ட செயற் பொறியாளர் அவர்களால் வழங்கப்படும். அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பம் பெறப்படாத பதிவுகளுடன் வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

09. மேலும், இவ்வொப்பந்தப்புள்ளி அழைப்பில் கோரப்படும் பணிகள் அனைத்தும் ஒப்பந்தக்காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். தற்போது செய்து வரும் பணிகள் ஏதேனும் இருப்பின் வேலையின் பெயர், ஒப்பந்தத் தொகை, செய்த வேலையின் மதிப்பு ஆகியவற்றினை தவறாது இணைக்க வேண்டும்.

10. ஒப்பந்தப்புள்ளியின் மூடுறையில் (கவரில்) வேலையின் பெயர், டேவணித்தொகை, ஒப்பந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி ஆகியவற்றினை தவறாது குறிப்பிட வேண்டும். அவ்வாறில்லாது பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படமாட்டாது. மூடி முத்திரையிடப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

11. ஒப்பந்தக்காரர் செய்யும் பணியின் மதிப்பீட்டுத் தொகைக்கு தக்கவாறு தொழில் நுட்ப அலுவலர்களை நியமனம் செய்து அவர்களின் பெயர் கல்வி தகுதியுடன் சான்றிதழ்கள் மற்றும் பணியை மேற்பார்வையிட ஒப்புதல் கடிதம் ஆகியவற்றுடன் மேற்கண்ட விபரங்களை ஒப்பந்தப்படிவத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

12. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை முழுமையாக படித்து பூர்த்தி செய்து, ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திட வேண்டும், முழுமையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

13. ஒப்பந்தப்புள்ளியுடன் இது வரை செய்த பணிகளின் விவரங்கள் பணி தொடங்கிய நாள் பணி முடிவடைந்த நாள் ஆகியவற்றினை பட்டியலிட்டும் மேலும் தற்போது ஏதேனும் பணி செய்யப்படுமாயின் அப்பணியின் பெயர், பணி தொடங்கிய நாள், பணி முடிவடைய வேண்டிய நாள், தற்போதைய நிலை ஆகியன பட்டியலிட்டு இணைக்கப்பட வேண்டும்.

14. ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு முன் கட்டுமானத்திற்கு தேவைப்படும் தளவாடப் பொருட்கள் கிடைக்குமிடம் மற்றும் தேவையான அளவு இவற்றினை உறுதி செய்து கொண்டு ஒப்பந்தபுள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.

15. ஏற்கனவே பணி ஒப்பந்தம் இரத்து செய்தவர்கள், ஒப்பந்தப்புள்ளி நிலையில் இரத்து செய்தவர்களது ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலணையில் ஏற்றுக் கொள்ளப்படாது.

16. ஒப்பந்தப்புள்ளி தேதி நிலையில் ஒப்பந்தக்காரர் பதிவு நிலையில் இல்லாதது, செயற்பொறியாளர் மந்தன அறிக்கையின்படி பணித்திறன், நிதிதிறன் குறைவானவரது ஒப்பந்தப்புள்ளிகளும் பரிசீலிக்கப்படாது.

<u>இணைப்பு:</u> வேலைகளின் விவர அட்டவணை.

7/11/16

பொது மேலாளர் (தொ.நு)

பெறுநர்.
தாட்கோ ஒப்பந்தக்காரர்கள் (பட்டியல்படி.)
(தொடர்புடைய கோட்டங்களின் மூலமாக)

07/11/16

நகல்:

1. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
2. தலைவர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக.
3. அரசு முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தலைமைச்செயலகம், சென்னை – 9 அவர்களுக்கு தகவலுக்காக.
4. இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை – 5 அவர்களுக்கு தகவலுக்காக.
5. இயக்குநர், பழங்குடியினர் நலத் துறை, சென்னை – 5 அவர்களுக்கு தகவலுக்காக.
6. முதன்மை செயலாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை அவர்களுக்கு தகவலுக்காக
7. பொது மேலாளர் (நிர்வாகம்) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
8. பொதுமேலாளர் (வளர்ச்சி) தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
9. நிதிஆலோசகர் (ம) தலைமை கணக்கு அலுவலர், தாட்கோ அவர்களுக்கு தகவலுக்காக.
10. நிறுவனச் செயலர், தாட்கோ, தலைமையகம், சென்னை – 18 அவர்களுக்கு தகவலுக்காக.
11. அனைத்துக் கோட்ட செயற் பொறியாளர்கள்.
12. நகல். அறிவிப்புப் பலகைக்கு.

## தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்
## தேனாம்பேட்டை, சென்னை – 18.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 5/ 2016–17 நாள்: 07.11.2016

விழுக்காடு மொத்த ஒப்பந்த வகை.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் கீழ்க்காணும் விவரப்படி பணியின் எதிரில் குறிப்பிடப்பட்ட நாளில் மாலை 3.00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பொது மேலாளர் (தொழில் நுட்பம்), தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை மற்றும் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளரால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் தாட்கோ தலைமை அலுவலகத்திலுள்ள ஒப்பந்தப்புள்ளி ஆய்வுக் குழுவினரால் முற்பகல் 11.00 மணியளவில் வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் (அல்லது) அவர்களது முகவர்களின் முன்னிலையில் திறக்கப்படும். அரசாணை எண் 81/ ஆதிமபகுநலத்துறை/ நாள் 10.09.2011 ன்படி தாட்கோ, தமிழக அரசுத் துறைகள் / நிறுவனங்கள்/ மத்திய அரசுத் துறைகள் / நிறுவனங்கள், ஆகியவைகளில் அரசாணை எண்.222/பொதுப்பணித்துறை/ நாள்.08.04.1999 நடைமுறை விதிகளின்படி பதிவு செய்துள்ள கட்டிடப் பணியில் அனுபவமுள்ள முதல் அழைப்பாக இருந்தால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒப்பந்தக்காரர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்துக் கொள்ளலாம், மற்ற அழைப்புகளுக்கு அனைத்து ஒப்பந்தக்காரர்களும் ஒப்பந்தப்புள்ளிஅழைப்பில் கலந்துக் கொள்ளலாம். தாட்கோவில் ஒப்பந்த பதிவு பெறாதவர்கள் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்வதற்கு முன் 2016–17 நிலையில், தாட்கோவில் தகுந்த வகுப்பில் ஒப்பந்தக்காரராக பதிவு செய்து கொள்ளவேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தாட்கோ, பொது மேலாளர் (தொழில் நுட்பம்) அலுவலகம் மற்றும் சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் உரிய சான்றிதழ்களுடன் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கான தொகையினைச்செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது இணைய தளத்தின் மூலம் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

"Tender form can be downloaded free of cost from www.tenders.tn.gov.in"

| வ. எண் | வேலைகளின் விவரம் | | பணி விவரம் | வேலை முடிக்க நிர்ணயிக்கப் பட்ட காலம் | முன் வைப்புத் தொகை ரூபாய் | ஒப்பந்தக்காரர் பதிவு வகுப்பு | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை மற்றும் விற்பனை வரி |
|---|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் | இடம் | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| **முதல் அழைப்பு** | | | | | | | |
| **ஆதிதிராவிடர் நல விடுதிகள் கட்டுதல்** | | | | | | | |
| 1 | திருவள்ளூர் | வடகரை | ஐ.டி.ஐ. மாணவர் விடுதி | 9 மாதங்கள் | 54000 | வகுப்பு (1) | 15000+750 |
| 2 | திருச்சி | திருச்சி | பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி | 9 மாதங்கள் | 58500 | வகுப்பு (1) | 15000+750 |
| 3 | சென்னை | வேப்பேரி (மலர் சாலை) | பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி | 9 மாதங்கள் | 41000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல துவக்க , நடுநிலை , உயர்நிலை , மேல்நிலை பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை, ஆய்வு கூடம் , சுற்றுச்சுவர், கழிவறைகூடம் மற்றும் குடிநீர் வசதிப்பணிகள்** | | | | | | | |
| 4 | திருவள்ளூர் | மதுரவாயல் | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 31000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 5 | காஞ்சிபுரம் | மேல்ஒட்டிவாக்கம் | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 31000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 6 | காஞ்சிபுரம் | அனகாபுத்தூர் | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 31000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 7 | காஞ்சிபுரம் | மீனம்பாக்கம் | மேல்நிலைப்பள்ளி | 6 மாதங்கள் | 43500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 8 | காஞ்சிபுரம் | கெருகம்பாக்கம் | துவக்கப்பள்ளி | 4 மாதங்கள் | 17000 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 9 | காஞ்சிபுரம் | கடுகுப்பட்டு | துவக்கப்பள்ளி | 4 மாதங்கள் | 17000 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 10 | காஞ்சிபுரம் | மணமை | துவக்கப்பள்ளி | 4 மாதங்கள் | 17000 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | காஞ்சிபுரம் | பாலவாக்கம் | துவக்கப்பள்ளி | 4 மாதங்கள் | 17000 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 12 | காஞ்சிபுரம் | ஒழலூர் | நடுநிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 17000 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 13 | திருவள்ளூர் | மிட்டனமல்லி | துவக்கப்பள்ளி | 4 மாதங்கள் | 17000 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 14 | காஞ்சிபுரம் | பதுவஞ்சேரி | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 28000 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 15 | காஞ்சிபுரம் | அனகாபுத்தூர் | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 36000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 16 | காஞ்சிபுரம் | பரமசிவம் நகர் | நடுநிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 35000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 17 | திருவண்ணாமலை | களியம் | துவக்கப்பள்ளி | 5 மாதங்கள் | 35000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 18 | விழுப்புரம் | களத்தூர் | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 31000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 19 | விழுப்புரம் | மூலக்காடு | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 35500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 20 | விழுப்புரம் | வானூர் | துவக்கப்பள்ளி | 5 மாதங்கள் | 27000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 21 | கடலூர் | கோ. பூவனூர் | துவக்கப்பள்ளி | 4 மாதங்கள் | 17000 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 22 | கடலூர் | சாட்டைமேடு (எல்லேரி) | துவக்கப்பள்ளி | 5 மாதங்கள் | 30000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 23 | கடலூர் | சுக்கன் நகர் | துவக்கப்பள்ளி | 5 மாதங்கள் | 30000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 24 | திருப்பூர் | அம்மாபட்டி | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 31000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 25 | கோயம்புத்தூர் | வேலஸ்புரம் | மேல்நிலைப்பள்ளி | 6 மாதங்கள் | 37500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 26 | ஈரோடு | பர்கூர் | மேல்நிலைப்பள்ளி | 6 மாதங்கள் | 41500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 27 | சேலம் | சிக்கனம்பட்டி | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 31000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 28 | சேலம் | தேக்கம்பட்டு | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 35500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 29 | நாமக்கல் | முள்ளுக்குறிச்சி | மேல்நிலைப்பள்ளி | 6 மாதங்கள் | 41500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 30 | பெரம்பலூர் | மலையாளப்பட்டி | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 35500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 31 | திருச்சி | சோழமாதேவி | மேல்நிலைப்பள்ளி | 6 மாதங்கள் | 37500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 32 | திருச்சி | துளையாநத்தம் | துவக்கப்பள்ளி | 5 மாதங்கள் | 27000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 33 | சிவகங்கை | மல்லல் | துவக்கப்பள்ளி | 5 மாதங்கள் | 27000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 34 | திருவாரூர் | சவளக்காரன் | மேல்நிலைப்பள்ளி | 6 மாதங்கள் | 43500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |
| 35 | திருவாரூர் | அபிஷேகக்கட்டளை | மேல்நிலைப்பள்ளி | 9 மாதங்கள் | 67000 | வகுப்பு (1) | 15000+750 |
| 36 | விருதுநகர் | சுந்தராஜபுரம் | மேல்நிலைப்பள்ளி | 9 மாதங்கள் | 79000 | வகுப்பு (1) | 15000+750 |
| 37 | திருவள்ளூர் | மேலூர் | துவக்கப்பள்ளி | 5 மாதங்கள் | 36000 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 15000+750 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 38 | கடலூர் | சேப்பாக்கம் (பெண்) | மேல்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 18500 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 39 | கடலூர் | சிதம்பரம் நந்தனார் (ஆண்கள்) பகுதி - I | மேல்நிலைப்பள்ளி | 9 மாதங்கள் | 82000 | வகுப்பு (1) | 15000+750 |
| 40 | கடலூர் | சிதம்பரம் நந்தனார் (ஆண்கள்) பகுதி - II | மேல்நிலைப்பள்ளி | 9 மாதங்கள் | 60000 | வகுப்பு (1) | 15000+750 |
| 41 | கடலூர் | சிதம்பரம் நந்தனார் (ஆண்கள்) பகுதி - III | மேல்நிலைப்பள்ளி | 9 மாதங்கள் | 60000 | வகுப்பு (1) | 15000+750 |
| 42 | விழுப்புரம் | மணியார்பாளையம் | மேல்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 11500 | வகுப்பு (4)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 43 | ஈரோடு | ஆசனூர் | மேல்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 11500 | வகுப்பு (4)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 44 | ஈரோடு | தலமலை | உயர்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 11500 | வகுப்பு (4)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 45 | நீலகிரி | கரிக்யூர் | உயர்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 11500 | வகுப்பு (4)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 46 | நாமக்கல் | களங்காணி | மேல்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 23500 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 47 | அரியலூர் | பூவானிப்பட்டு | மேல்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 20500 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 48 | அரியலூர் | வெட்டியார்வெட்டு | மேல்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 20500 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 49 | அரியலூர் | விளந்தை | உயர்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 20500 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 50 | திருவாரூர் | சவளக்காரன் | மேல்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 18500 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| 51 | திருவாரூர் | நெடுங்குளம் | மேல்நிலைப்பள்ளி | 4 மாதங்கள் | 18500 | வகுப்பு (3)–ம் அதற்கு மேலும் | 6000+300 |
| **இரண்டாம் அழைப்பு** | | | | | | | |
| **I. ஆதிதிராவிடர் நல விடுதிகள் கட்டுதல்** | | | | | | | |
| 52 | விருதுநகர் | ஊஞ்சம்பட்டி | மாணவியர் விடுதி | 9 மாதங்கள் | 60500 | வகுப்பு (1) | 15000+750 |
| 53 | தூத்துக்குடி | எட்டையபுரம் | மாணவியர் விடுதி | 9 மாதங்கள் | 60500 | வகுப்பு (1) | 15000+750 |
| **II. ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு வகுப்பறைகள் மற்றும் ஆய்வு கூட்டம் கட்டுதல்** | | | | | | | |
| 54 | திருநெல்வேலி | கடம்பன் குளம் | மேல்நிலைப்பள்ளி | 6 மாதங்கள் | 34500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 55 | திருநெல்வேலி | துலுக்கர்பட்டி | மேல்நிலைப்பள்ளி | 6 மாதங்கள் | 34500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 56 | விருதுநகர் | இடையன்குளம் | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 28500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 57 | தூத்துக்குடி | கரிசல்குளம் | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 28500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 58 | தூத்துக்குடி | திருமங்களகுறிச்சி | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 28500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |
| 59 | சேலம் | இராமன்பட்டி | உயர்நிலைப்பள்ளி | 5 மாதங்கள் | 32500 | வகுப்பு (2)–ம் அதற்கு மேலும் | 9000+450 |

**முன்வைப்புத்தொகை வரவு வைக்கப்பட வேண்டிய விபரம்**

| | | | |
|---|---|---|---|
| வ. எண்: 1, 3 முதல் 16 வரை மற்றும் 37 | | செயற்பொறியாளர், தாட்கோ, சென்னை | 16 |
| வ. எண்: 24 முதல் 26 வரை மற்றும் 43 முதல் 45 வரை | | செயற்பொறியாளர், தாட்கோ, கோயம்புத்தூர் | 6 |
| வ. எண்: 2, 30 முதல் 32 வரை மற்றும் 47 முதல் 49 வரை | | செயற்பொறியாளர், தாட்கோ, திருச்சி | 7 |
| வ. எண்: 17. | | செயற்பொறியாளர், தாட்கோ, வேலூர் | 1 |
| வ. எண்: 27 முதல் 29 வரை மற்றும் 46, 59. | | செயற்பொறியாளர், தாட்கோ, சேலம் | 5 |
| வ. எண்: 18 முதல் 23 வரை மற்றும் 38 முதல் 42 வரை | | செயற்பொறியாளர், தாட்கோ, விழுப்புரம் | 11 |
| வ. எண்: 33. | | செயற்பொறியாளர், தாட்கோ, மதுரை | 1 |
| வ. எண்: 36, 52 முதல் 58 வரை | | செயற்பொறியாளர், தாட்கோ, திருநெல்வேலி | 8 |
| வ. எண்: 34,35, 50 மற்றும் 51. | | செயற்பொறியாளர், தாட்கோ, தஞ்சாவூர் | 4 |
| மொத்தம் | | | 59 |

**ஒப்பந்தப்புள்ளிபடிவம் கிடைக்குமிடங்கள்: தாட்கோ தலைமையலுவலகம் மற்றும் சம்மந்தப்பட்ட கோட்டம்**

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளிபடிவத்தின் விற்பனைக் காலம் : | 11.11.2016 முதல் 28.11.2016 வரை | மாலை 5.45 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள்: (தாட்கோ தலைமையலுவலகம் மற்றும் சம்மந்தப்பட்ட கோட்டம்) | 29.11.2016 | மாலை 3.00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப் புள்ளி ஆய்வுக் குழுவினரால் திறக்கப்படும் நாள் | 30.11.2016 | முற்பகல் 11.00 மணியளவில் |

7/11/16

பொது மேலாளர் (தொ.நு.)